**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.161/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 1 |
| Name (திரு/திருமதி) | : ராபர்ட்சேவியர் |
| Father's Name/ Husband's Name | : வனத்தையன் |
| Village & Taluk | : கடனாடிதாங்கள் |
| Calling | : விவசாயம் |
| Age | : 42 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.09.2025**

(1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை :**

1. பட்டியல் சாட்சி–2 ஜானிஜோஸ் எனது தங்களை ஆவார். ஆஜர் 2 மற்றும் 3ம் எதிரிகள் மற்றும் 1ம் எதிரி ஆகியோர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். 09.12.2015ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் சோழந்தாங்கல் சாலை வழியாக எனது நிலத்திற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது ஆரோக்கியதாஸ் என்பவரின் வீட்டின் அருகில் செல்லும்போது 1ம் எதிரி மனோஜ் ஆல்வின் என்பவர் என்னை வழிமறித்து தகாத வார்த்தைகளால் திட்டினார். மேலும், அவர் என்னை தடியால் என் முகத்தில் தாக்கினால் அதில் என் மூக்கில் காயம் ஏற்பட்டது. பின்பு 2ம் எதிரி ஜான்போஸ்கோ என்பவர் என்னுடைய கழுத்தை இறுக்கினார். 3ம் எதிரி அமல்தாஸ் என்பவர் எனது இரு கைகளையும் பிடித்துக்கொண்டு தாக்கினார். அப்போது வலி தாங்க முடியால் கத்தினேன். சத்தம்கேட்டு எனது தங்கை ஜானிஜோஸ் தடுக்க வந்தார். அவரை 1ம் எதிரி தாக்கி எட்டி உதைத்தார் மேலும், எனது தங்கையின் கையை கடித்துவிட்டார். வலி தாங்க முடியால் அவரும் கத்தினார். அப்போது அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்து சண்டையை தடுத்து எங்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காயமடைந்த நானும், எனது தங்கையும் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். மருத்துவமனையில் இருந்தபோது காவலர்கள் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றனர். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **மேற்படி புகார்**

**வாக்குமூலம் அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே முன் விரோதம் எதுவும் இல்லை. அமல்தாஸ் என்பவரின் வீட்டினிடம் பிரச்சனை நடந்ததாக கூறுகிறேன். அங்கு எனக்கு சொந்தமான நிலம் மற்றும் வீடு இல்லை என்றால் சரிதான், ஆனால் நான் அந்த வழியாக சென்றபோது தான் சம்பவம் நடந்தது. மேற்படி சம்பவம் நடந்த சாலையானது ஜல்லி போடப்பட்டிருந்த சாலை ஆகும்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நான் மது போதையில் இல்லை. எனக்கும் எதிரிகளுக்கும் இடையே எந்த முன்விரோதமும் இல்லை என்ற பட்சத்தில் எதிரிகள் என்னை தாக்க என்ன அவசியம் ஏற்பட்டது என்றால் அது குறித்த விவரம் எனக்கு தெரியவில்லை. நான் அமல்தாஸ் என்பவரின் வீட்டினிடம் மது போதையில் சென்று அங்கு தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்தேன் என்றாலும், அதனை தான் அமல்தாஸ் என்னிடம் கேட்டார் என்றாலும் சரியல்ல. நான் அமல்தாஸ் என்பவரின் அண்ணன் மகளிடம் தகாத முறையில் நடந்து கொண்டு அவருக்கு பாலியல் தொல்லை அளித்துக் கொண்டிருந்தேன் என்றாலும், அதன் காரணமாகத்தான் அமல்தாஸ் என்னிடம் கேட்டார் என்றாலும் சரியல்ல.

3. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது நான் மயங்கி விட்டேன் என்றாலும் மருத்துவமனைக்கு சென்ற பிறகு தான் எனக்கு சுயநினைவு திரும்பியது என்றாலும் சரிதான். முதலில் பிரச்சனை நடந்தபோது என் தங்கை சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். ஆனால் அவர் சத்தம்கேட்டு சம்பவ இடத்திடம் வந்தார். ஆல்பர்ட் குரானா என்பவர் தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். எங்கள் கிராமத்திற்கும் செஞ்சி அரசு மருத்துவமனைக்கும் இடையே சுமார் 17 கிமீ தூரம் இருக்கும். மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் வந்தேன். சுமார் அரை மணி நேரத்திற்குள் மருத்துவமனைக்கு வந்திருப்பேன் என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், நான் 1½ மணி நேரம் காலதாமதாகத்தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் எனக்கு சுயநினைவு இல்லாத காரணத்தினால் எப்போது மருத்துவமனைக்கு சென்றேன் என்ற விவரம் தெரியவில்லை.

4. மருத்துவமனையில் மருத்துவர் என்னை விசாரித்தார். மருத்துவமனையில் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை

எடுத்துக்கொண்டேன். காவலர்கள் என்னை என்று மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்பது தற்போது நினைவில் இல்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்களை காவலர்கள் எனக்கு படித்து காண்பித்தனர். அவரது பதவி எனக்கு தெரியாது. காவலர்கள் என்னிடம் வாக்குமூலம் பெற்றபோது எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் உடன் இருந்தார். நான் சொல்வது தவறு என்றாலும், மருத்துவர் அப்போது உடன் இருக்கவில்லை என்றாலும், சரியல்ல.

5. நான் மேலே குறிப்பிட்ட ஜல்லி கற்கள் கொட்டப்பட்ட சாலையில் நடந்து சென்றபோது நானாக கீழே விழுந்து அதன் விளைவாகத்தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், அதனை வைத்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் அமல்தாஸ் என்பவரின் அண்ணன் மகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்தேன் என்றாலும், அதன் விளைவாக அவர்கள் என் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர் என்றால் சரியல்ல. அதற்கான புகார் ஏற்பு ரசீது எதிரிகளிடம் உள்ளது என்றால் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. நான் 3 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டதற்காக சான்றிதழ் வழங்கப்பட்டது. அதனை நான் காவலர்களிடம் கொடுக்கவில்லை. இந்த வழக்கு தொடர்பாக புகார் வாக்குமூலம் அளித்த பின்னர் காவலர்கள் இதுவரை என்னை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/−B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.161/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 2 |
| Name (திரு/திருமதி) | : ஜானிஜோஸ் |
| Father's Name/ Husband's Name | : ஆல்பர்ட்குரானா |
| Village & Taluk | : கடலாடிதாங்கள் |
| Calling | : இல்லதரசி |
| Age | : 38 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.09.2025**

(1ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை :**

1. அ.சா.1(ராபர்ட் சேவியர்) எனது அண்ணன் ஆவார். ஆஜர் 2 மற்றும் 3ம் எதிரி மற்றும் 1ம் எதிரி எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த 09.12.2015 அன்று மாலை 04.00 மணிக்கு மேல் சோழந்தாங்கல் கிராமத்தில் உள்ள நிலத்திற்கு எனதுஅண்ணன் சென்று கொண்டிருந்தபோது எனது அண்ணனை 1 முதல் 3 எதிரிகள் தாக்கிக்கொண்டிருந்தார்கள். அப்போது 3ம் எதிரி எனது அண்ணன் கழுத்தை நெறுக்கிக்கொண்டிருந்தார். எனது அண்ணன் சத்தம்போட்டபோது நான் சென்று தடுத்தேன். அப்போது 1ம் எதிரி எனது வலது கையை கடித்து எட்டி உதைத்தார். அதில் நான் கீழே விழுந்துவிட்டேன். காயமடைந்த என்னை எனது கணவர் ஆல்பர்ட் குரானா இரு சக்கர வாகனத்தில் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. அமல்தாஸ் என்பவரின் அண்ணன் மகளுக்கு என் அண்ணான அ.சா.1 பாலியல் தொல்லை கொடுத்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது

என்றால் பொய் புகார் கொடுக்கப்பட்டது. பின்னர் அதுவும் வாபஸ் பெறப்பட்டது. எனது அண்ணனுக்கு இரவில் மட்டும் மது அருந்தும் பழக்கம் உள்ளது. நான் சம்பவ இடத்திடம் சென்றபோது எனது அண்ணன் அடிப்பட்டு கீழே விழுந்து கிடந்தார் என்றால் இல்லை, அவரின் கழுத்தை பிடித்துக்கொண்டிருந்தனர். அ.சா.1யை தாக்கியபோது நான் சம்பவ இடத்திடம் இல்லை என்றாலும் சத்தம்கேட்டு தான் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றாலும் சரிதான். எனவே அ.சா.1 நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்னர் அமல்தாஸ் வீட்டினிடம் ஆபாசமாக பேசி சத்தம்போட்டுக்கொண்டிருந்த சங்கதி எனக்கு தெரியாது என்றால் அவர் அவ்வாறு செய்யவில்லை. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்து பொய் என்றால் சரியல்ல.

2. எனது கிராமத்தில் இருந்து மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் சுமார் அரை மணி நேரத்தில் வந்துவிட இயலும் என்றால் சரிதான். எனது அண்ணன் 2 மணி நேரம் கழித்தும் நான் 3 மணி நேரம் கழித்தும் மருத்துவமனைக்கு சென்றேன் என்றாலும், காலதாமதத்திற்கான காரணம் என்னவென்றால் நாங்கள் இருவரும் மேற்படி நேரத்திற்கு முன்னதாகவே மருத்துவமனைக்கு வந்துவிட்டோம். அ.சா.1 மருத்துவமனைக்கு வந்தபோது சுய நினைவுடன் இல்லை. மருத்தவமனையில் சேர்ந்த பின்னர் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது அதன் பின்னர் அவருக்கு சுயநினைவு வந்தது.

3. சம்பவத்தன்று சிகிச்சைக்கு சேர்ந்த பின்னர் அன்றே காவலர்கள் அ.சா.1யை விசாரித்து வாக்குமூலம் பெற்றனர். மருத்துவமனையில் உள்ள காவலர்கள் அறையில் வைத்து காவலர்கள் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அ.சா.1ற்கு தெரியுமா என்றால் அதன் விவரங்களை நான் தான் கூறினேன். நான் சொல்லி காவலர்கள் எழுதிய தாளில் தான் அ.சா.1 கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எனது அண்ணன் கையொப்பம் செய்தபோது நான், காவலர்கள் இருந்தோம். அப்போது மருத்துவர் உடன் இருந்தாரா என்பது

தற்போது நினைவில் இல்லை. அ.சா.1, நானும், சுமார் ஒரு வார காலம் சிகிச்சையில் இருந்தோம்.

4. காவலர்கள் என்னை மருத்துவமனையில் விசாரித்த பின்னர் இவ்வழக்கு தொடர்பாக இதுவரை விசாரித்து வாக்குமுலம் பெறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 கரடுமுரடான சாலையில் தவறி கீழே விழுந்துவிட்டார் என்றாலும், என்னை வளர்ப்பு பிராணிகள் கடித்துவிட்டது என்றாலும் அதை வைத்து எதிரிகள் மீது பொய் புகார் அளித்துள்ளோம் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், எனது அண்ணன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

| |
|---|
| என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.<br>Sd/–B.Vidhya,<br>குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>செஞ்சி. |